# முதல்
# ஏழு சங்கீதங்களிலிருந்து
# முத்தான செய்திகள் !



Evt. J.J. குருசிங்

# முதல் ஏழு சங்கீதங்களிலிருந்து முத்தான செய்திகள்!




**Contact Address :**

**EVT. J.J. GURUSINGH**


**MIZPAH NIVAS**

Plot No. 129, Near C.S.I. New Church

Tuckkarammalpuram, Perumalpuram (Po)

**TIRUNELVELI - 627 007**

**Cell : 9443373026**



# சமர்ப்பணம்!

முத்தான வாழ்வுக்கு
முனைந்து வழிகாட்டும்
முத்துக்கும் மேலான மேதை; - அவரை
முன்னிறுத்தி வாழ்வோர்
முன்னேற்றம் கண்டோர் - என
முன்னிறுத்தி இந்நூலை
முன்னவரின் பாதம்
படைத்து சமர்ப்பிக்கிறேன்



# முன்னுரை...

முதல் ஏழு சங்கீதங்களிலிருந்து முத்தான செய்திகள் என்ற இப் புத்தகத்தை எழுதி வெளியிட இரக்கம் செய்ய ஆண்டவருக்கு கோடி ஸ்தோத்திரங்கள்.

இப்புத்தகத்தின் வெளியிடும் செலவை தூத்துக்குடி ஆசிரியர் காலணியை சார்ந்த ஒரு குடும்பத்தினரும், டோனாவூர் பகுதியைச் சார்ந்த ஒரு குடும்பத்தினரும் பொறுப்பெடுத்துக் கொண்டார்கள். சங். 29:11ன் படி தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

ஜெபியுங்கள்! படியுங்கள்!

**தேவகிருபை அனைவரையும்**

**ஆளக்கடவது.**

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|


1. ஆண்டவரைப் பிரியப்படுத்துவது எப்படி? 5
2. ஆண்டவருடைய நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படுவது எப்படி? 12
3. உபத்திரவத்தை எதிர்கொள்வது எப்படி? 20
4. ஆண்டவரிடத்திலிருந்து நீதியைப் பெற்றுக் கொள்வது எப்படி? 28
5. தேவனை நேசிப்பது எப்படி? 32
6. சிட்சையை சகிப்பது எப்படி? 36
7. தேவ மனிதர்களாய் நடந்து கொள்வது எப்படி? 41

# I. ஆண்டவரை பிரியப்படுத்தவது எப்படி?

அமெரிக்காவில் பிரபலமான மருந்துக்கடை கம்பெனி ஒன்றை தொடங்கி நடத்தியவர் "ஜாக் எக்கார்ட்" ஆவார்.

இவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தன் வாழ்வின் இரட்சகராக ஏற்றுக் கொண்ட பின் ஆண்டவருக்குப் பிரியமான காரியங்களை செய்வதிலும், ஆண்டவருக்கு பிரியமற்ற காரியங்களை அகற்றுவதிலும் முனைப்புடன் செயல்பட்டார். ஒரு தடவை தன் கம்பெனியைச் சார்ந்த கடை ஒன்றில் கவர்ச்சியான பெண்களின் படங்களடங்கிய ஆபாசப் பத்திரிக்கை விற்பனை செய்யப்படுவதைக் கவனித்தார். அவருடைய கம்பெனியைச் சார்ந்த 1700 கடைகளிலும் அப்படிப்பட்ட புத்தகங்களின் விற்பனையால் ஏராளமான வருமானம் வந்து கொண்டிருந்தது.

பெரும் நஷ்டம் வரும் என அறிந்தாலும், ஆண்டவரைப் பிரியப்படுத்த மனதுள்ளவராய் அந்த ஆபாசப் பத்திரிக்கைகளின் விற்பனையை தனதுக் கம்பெனி கடைகளில் தடை செய்தார். இந்தத் தீர்மானத்துக்கு அவரைத் தூண்டியது யார் என அவரிடம் கேட்ட பொழுது "ஆண்டவர் தான்" என அழுத்தமாக பதில் சொன்னார் ஜான் எக்கார்ட்.

லாபமோ, நஷ்டமோ ஆண்டவரைப் பிரியப்படுத்துவதே அவசியமான காரியம்.

கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள். (எபே. 5:10) என எபேசியர்

சபைக்கு அழைப்பு விடுத்தார் பவுல். உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்கு போதித்தருளும் என விண்ணப்பம் செய்தார் தாவீது. (சங். 143:10)

அதே தாவீது தான் எழுதிய முதலாம் சங்கீதத்தில் ஆண்டவரைப் பிரியப்படுத்த மூன்று முத்தான வழிகளை வெளிப்படுத்துகிறார். அவை . . .

## I. வேதத்தில் பிரியமாயிருந்தால் தேவன் பிரியமாயிருப்பார் :

***"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும், பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."*** (சங். 1:2)

ஆண்டவர் அருளிய வேதாகமத்தில் யார் பிரியமாயிருக்கிறார்களோ அவர்கள் மீது ஆண்டவரும் பிரியமாயிருக்கிறார்.

தேவ மனிதராகிய தாவீது தேவனருளிய வேதாகமத்தின் மீது தான் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறேன் என்பதை பல்வேறு வசனங்களில் குறிப்பிடுகிறார்.

"நான் பிரியப்படுகிற உமது கற்பனைகளின் பேரில் மனமகிழ்ச்சியாயிருப்பேன்." (சங். 119:47)

"துன்மார்க்கரின் கூட்டங்கள் என்னைக் கொள்ளையிட்டும் உம்முடைய வேதத்தை நான் மறக்கவில்லை"(சங். 119:61)

"உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன். நாள் முழுதும் அது என் தியானம்." (சங். 119:97)

கர்த்தருடைய வேதத்தில் பிரியம் வைத்த தாவீதின் மேல் கர்த்தரின் பிரியமும் இருந்தது. (அப். 13:22)

அமெரிக்க நாட்டில் "பிலிப்ஸ் ப்ரூக்ஸ்" என்பவர் அர்ப்பணிப்புள்ள போதகராக ஊழியம் செய்தார். இவரின் சபையை சேர்ந்த ஒருவர் ஆர்வத்தோடு இவரிடம் வந்தார். "ஐயா! எனக்கு ஒரு ஆசையுண்டு நான் சீனாய் மலைக்கு போய் மலை உச்சியில் நின்று பத்துக்கட்டளைகளை உரக்க வாசிக்க விரும்புகிறேன்." என்றார்.

அதை விட சிறப்பான ஒரு காரியமிருக்கிறது என்றார் பிலிப்ஸ் புரூக்ஸ். "அப்படியா? அது என்ன? என வினவினார் சபை உறுப்பினர்.

பிலிப்ஸ் புரூக்ஸ் உறுதியாகச் சொன்னார். "ஆயிரக்கணக்கான மைல்கள் சென்று, சீனாய் மலைமீது நின்று, பத்துக்கட்டளைகளை வாசிப்பதை விட வீட்டிலிருந்து அவற்றுக்குக் கீழ்ப்படியலாமே."

இந்த வார்த்தையின் உண்மையை உணர்ந்த சபை உறுப்பினர் மறுபேச்சில்லாமல் மௌனித்து நின்றார்.

ஆண்டவருடைய வேதத்தில் பிரியமாயிருப்பது என்றால் அதை வாசிப்பதும், அதைப்பற்றி யோசிப்பதும் மட்டுமல்ல அதை நம்முடைய வாழ்வில் நடைமுறைப் படுத்துவதும் ஆகும். எனவே தான்,

"கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்." (சங். 119:1) என எழுதப்பட்டுள்ளது.

வேதத்தின்படி நடக்க மனதில்லாத மக்களைக் குறித்து, "நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்." (ஓசி. 4:6) என ஆண்டவர் வேதனைப் பட்டார்.

வேதத்தின்படி நடக்க தாகத்தோடு அர்ப்பணிப்போம். அப்பொழுது ஆண்டவர் நம்மேல் பிரியமாயிருப்பார். இரண்டாவதாக . . .

## 2. மாறுபட்ட மனிதர்களை விட்டு விலகியிருந்தால் ஆண்டவர் பிரியமாயிருப்பார் :

*"துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் . . ."* (சங். 1:1)

மாறுபட்ட மனிதர்கள் என்பது துன்மார்க்கர், பாவிகள், பரியாசக்காரர் முதலானோரைக் குறிக்கும். இவர்களது செயல்கள் ஆண்டவருக்கு எதிரானவைகள். துன்மார்க்கம், பாவம், பரியாசம் இவையெல்லாம் தேவனாகிய கர்த்தர் வெறுக்கும் வேதனைக்குரிய காரியங்களாகும். இவர்களுக்காக பாரத்தோடு பரிவோடு நாம் ஜெபிக்கலாம். ஆனால் இவர்களுடைய செயல்களுக்கு நாம் இணைந்து போகக் கூடாது. இவர்களோடு நாம் ஐக்கியப்பட்டால் நம்முடைய நற்சாட்சியை அது பாதிக்கும். அது மட்டுமின்றி நாமும் தவறான காரியங்களில் ஈடுபடவேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாவோம்.

இதைக் குறித்து பவுல் எழுதும் போது, "ஒருவன் விபச்சாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாரதனைக் காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது கொள்ளைக்காரனாயாவது இருந்தால் அவனோடே கலந்திருக்கக் கூடாது." (1 கொரி. 5:11) எனக் குறிப்பிடுகிறார்.

தேவனாகிய கர்த்தரோடு நெருங்கியிருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ, தவறான நபர்களை விட்டு விலகியிருப்பதும் மிக மிக அவசியம்.

பெண்மணி ஒருவர் H.A. அயன்சைட் என்ற தேவ மனிதரைப் பார்த்து, "நீங்கள் எந்த சபையை சேர்ந்தவர்? எனக் கேட்டாள். நான் தாவீதின் சபையைச் சார்ந்தவன் என அயன்சைட்பதில் சொன்னார். "அந்த சபையைப் பற்றி நான் கேள்விப்பட்டதிலையே!" என ஆச்சரியத்துடன் சொன்னார் அப்பெண்மணி. அயன்சைட் சிரித்துக் கொண்டே சொன்னார்.

"தாவீது 119 சங்கீதம் 63ல் சொன்னபடி கர்த்தருக்கு பயந்து அவர் கட்டளைகளைக் கைகொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன். (சங். 119:63)

தவறான நபர்களோடு பிள்ளைகள் பழகத் தொடங்கினால் பெற்றோர்கள் வேதனைப்படுகிறார்கள். ஆண்டவரும் அப்படித்தான். ஆண்டவர் வெறுக்கும் செயல்களில் ஈடுபட்டு விட்டு அவருடைய பிரியத்தை நாம் எதிர்பார்க்க முடியாது.

"அமெரிக்காவில் ப்ரூல் என்ற ஆறு பல மைல் தூரம் தெளிவானத் தண்ணீருடன் மிக அழகாக ஓடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஆனால் அந்த ஆற்றின் போக்கில் அயர்ன் என்ற பெயருடைய இன்னொரு கலங்கிய ஆறு இணைகிறது. இரண்டு ஆறுகளும் இணைந்து ஓடத் தொடங்கும் போது ப்ரூல் ஆறு தன் தெளிவான தன்மையை இழந்து அழுக்கடைந்து அழகிழந்து விடுகிறது.

இது தான் ஆன்மீக வாழ்விலும் நடக்கிறது. தேவனுக்கு பிரியமற்ற காரியங்களில் ஈடுபடுவோரோடு ஐக்கியம் கொள்வோர் தங்கள் தனித்தன்மையை இழந்து கறைபட்டுப் போகிறார்கள். தேவ பிரியத்தையும் இழக்கிறார்கள்.

எனவே தான் கொரிந்தியர் நிருபக்காரர் இவ்விதம் ஆலோசனைக் கொடுக்கிறார்.

"நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்து போய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொண்டு உங்களுக்கு பிதாவாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்." (2 கொரி. 66:15-18)

மூன்றாவதாக தேவனைப் பிரியப்படுத்தும் காரியத்தையும் சங்கீதக்காரன் விவரிக்கிறார். அது . . .

## 3. பிறருக்கு நன்மை செய்தால் ஆண்டவர் பிரியமாயிருப்பார் :

***"அவன் தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராயிருக்கிற மரத்தைப் போலிருப்பான்."*** (சங். 1:3)

கனிதரும் மரங்கள் தன் கனிகள் மூலமாக நட்டவர்களுக்கும், தன்னை நாடுவோர்க்கும் பயனளிக்கின்றன. இலையுதிரா நிலையில் இலை நிறைந்து நிழல் தரும் மரங்கள், தன்னை நாடி வருவோர்க்கெல்லாம் நிழல் தந்து பயனளிக்கின்றன.

கனிகளும், நிழலும் தரும் மரங்கள் மீது மாந்தர்கள் மனமகிழ்ச்சி கொண்டு பிரியம் வைப்பார்கள். அப்படியே பிறருக்கு பயன்தரும் வாழ்க்கையை நாம் வாழ்ந்தால் ஆண்டவரும் நம்மீது பிரியம் வைப்பார். எனவே தான் . . .

"ஒவ்வொருவனும் தன் சுய பிரயோஜனத்தைத் தேடாமல் பிறவனுடைய பிரயோஜனத்தைத் தேடக் கடவன்" என எழுதப்பட்டுள்ளது. (1 கொரி. 10:24)

அமெரிக்காவில் சிக்காகோ நகரில் 1871ம் ஆண்டு பெரும் தீ விபத்து ஏற்பட்டது. விபத்தினால்

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய நிதி திரட்டும்படி தேவ மனிதரான திரு. **D.L.** மூடி நியூயார்க் நகர் சென்றிருந்தார். அந்நகரில் பெரும் செல்வந்தர் ஒருவர் பெருந்தொகை ஒன்றை **D.L.** மூடியிடம் கொடுத்ததுமன்றி, தனக்கு தெரிந்த பல செல்வந்தர்களிடமும் அவரை அறிமுகப்படுத்தி பணம் சேர்த்துக் கொடுத்தார்.

விடைபெறும் போது செல்வந்தரின் கரத்தை குலுக்கிய **D.L.** மூடி, "நீங்கள் எப்பொழுதாவது சிக்காகோவிற்கு வருவதாக இருந்தால் என்னிடம் வரத் தவறாதீர்கள். உங்கள் தயவுக்கு நான் பதில் செய்வேன்." என்றார். செல்வந்தர் சிரித்துக் கொண்டே சொன்னார். "தேவையோடு உங்கள் எதிரில் வரும் முதல் மனிதனுக்கு அதை செய்யுங்கள்." மூடி இதைப் பற்றிக் குறிப்பிடும் போது, "அவர் கூறியதை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது. மெய்யான நல்ல சமாரியனின் வார்த்தையாக அது இருந்தது." என்றார்.

ஆம்! நம்மை சுற்றித் தேவைகளோடு காணப்படுவோருக்கு நம்மால் இயன்ற நன்மைகளை செய்யும் போது நீயும் போய் அந்தப்படியே செய் என்ற இயேசு கிறிஸ்துவின் கட்டளையை நாம் நிறைவேற்றுகிறோம். (லூக். 10:37)

நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது அதை செய்யத் தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே. (நீதி. 3:27)

- **வேதத்தில் பிரியம் வைப்போம்.**
- **மாறுபட்ட மனிதர்களை விட்டு விலகியிருப்போம்.**
- **பிறருக்கு நன்மை செய்வோம்.**

அப்பொழுது தேவன் நம் மேல் பிரியம் வைப்பார். பிரியமாய் ஆசீர்வதிப்பார். ஆமென்.

# II. ஆண்டவருடைய நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப்படுவது எப்படி?

*"குமாரன் கோபங் கொள்ளாமலும் நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு அவரை முத்தஞ் செய்யுங்கள். கொஞ்ச காலத்திலே அவருடைய கோபம் பற்றி எரியும்."* (சங். 2:12)

அமெரிக்காவில் சிறு நகரம் ஒன்றில் தேவனுடைய மனிதர் ஒருவர் இருந்தார். இவர் அடிக்கடி அந்நகரத்தின் தெருக்களில் நடந்து செல்லும் பொழுது, "ஆயத்தமாகுங்கள்; ஆயத்தமாகுங்கள், உலகம் அழியப் போகிறது." என்று கத்திக் கொண்டே செல்வாராம். மக்கள் அவருக்கு ஆயத்த மனிதன் என்று பெயர் வைத்திருந்தார்கள். அநேகர் அவரை மனநிலை சரியில்லாதவர் என நினைத்தார்கள். அவருடைய வார்த்தைக்கு யாரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

ஆனால் அவருடைய வார்த்தை வேதாகமத்தின் அடிப்படையானது. ஆயத்தமாயிருங்கள் என இயேசு கிறிஸ்துவும் எச்சரித்து சென்றதை நாம் மறந்துவிடக் கூடாது. (மத். 24:44)

ஆண்டவருடைய நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தப் படுங்கள் என்ற அழைப்பை இரண்டாம் சங்கீதம் பன்னிரெண்டாம் வசனம் நமக்குக் கொடுக்கிறது. எப்படி ஆயத்தப்பட வேண்டும் என்ற வழியை இச்சங்கீதத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்வோம்.

## 1. பலத்த கரத்தில் அடங்கியிருங்கள் !

*"கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் பூமியின் இராஜாக்கள் எழும்பி நின்று அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணி . . ."* (சங். 2:2)

இவ்வுலகத்திலுள்ள மக்களை மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம். ஆண்டவரைப் பற்றி அறியாதோர், ஆண்டவரை அறிந்தும் அவருக்கு அடங்காதோர், ஆண்டவருக்கு அடங்கி வாழ்வோர் என இம்முப்பிரிவுக்குள் அனைத்து மாந்தரின் வாழ்வும் உள்ளடங்கும்.

ஆண்டவரை அறிந்தும் அவருடைய கரத்துக்கு அடங்காத மக்களைக் குறித்து 2ம் சங்கீதத்தில் முதல் மூன்று வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் . . .

- கொந்தளிக்கிறார்கள் (சங். 2:1)
- விருதா காரியத்தை சிந்திக்கிறவர்கள். (சங். 2:1)
- ஆண்டவருக்கு விரோதமாய் எழும்புகிறார்கள். (சங். 2:2)
- ஆண்டவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணுகிறார்கள். (சங். 2:2)
- ஆண்டவரின் கட்டுகளை அறுத்து விடுவோம் என்கிறார்கள். (சங். 2:3)

இவ்விதம் அதிகாரிகளும், ஜாதிகளும், ஜனங்களும் பூமியின் இராஜாக்களும் ஆண்டவர் கரங்களில் அடங்க மறுத்து ஆண்டவரின் கோபத்துக்கு உள்ளானவர்களாய் ஆனது போல நாமும் வாழக்கூடாது.

ஏனெனில் அவர்களை பார்த்து ஆண்டவரே இகழுவார்; நகைப்பார் என எழுதப்பட்டுள்ளது. அவர்கள்

தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குள்ளாவார்கள்.

ஆதித்திருச்சபைக்கு விரோதமாக யூதத் தலைவர்கள் எழும்பின போது இரண்டாம் சங்கீத வசனங்களையே சபையார் நினைவுப்படுத்தி ஜெபித்தார்கள்; அவர்கள் ஜெபித்த இடம் அசைந்தது என அப்போஸ்தலர் 4:24-31 வசனங்களில் வாசிக்கிறோம்.

ஆண்டவருக்கு விரோதமாக எழும்பி, ஆண்டவருடைய பிள்ளைகளைக் கடும் துன்பத்துக்குள்ளாக்கிய முப்பது ரோம அதிகாரிகளின் முடிவைக் குறித்து W.S. புல்பிர் என்பவர் இவ்விதம் எழுதுகிறார்.

ஆண்டவருக்கு எதிராக செயல்பட்ட ரோம அதிகாரி ஒருவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. ஒருவன் தன் சொந்த மகனால் வெட்டிக் கொலை செய்யப்பட்டான். ஒருவன் கண் பார்வை இழந்தான். ஒருவன் தண்ணீரில் மூழ்கி இறந்தான். ஒருவன் கொடிய சிறையிருப்பில் மடிந்தான். ஒருவன் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டான். இருவர் தற்கொலை செய்து கொண்டார்கள். ஐந்து பேர் தங்கள் சொந்த ஜனங்களாலும், வேலைக்காரர்களாலும் கொல்லப் பட்டனர். இன்னும் ஐந்து பேர் கொடிய வேதனைக்குள்ளாகிப் பரிதாபமாய் மரித்தார்கள். அவர்களில் ஒருவனான ஜூலியன் என்பவன் பொதுவாக யுத்தத்தில் வெற்றியடைகிற வேளைகளில் தேவனுக்கு சவால் விடும் வண்ணம் தன் ஈட்டியை வானத்திற்கு நேராக நீட்டுவான். ஒருநாள் போர்க்களத்தில் காயப்பட்டு மரிக்கும் தருவாயில் "ஓ கலிலேயனே! நீ என்னை வென்று விட்டாய்" எனக் கதறினான்.

ஆண்டவரின் கரங்களுக்கு அடங்க மறுப்போர், எதிராக எழும்புவோர் தேவ கோபத்துக்குள்ளாவதை

மேற்கண்ட வரலாறு நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது.

தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய் கலகம் பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டை பண்ணினவர்கள் அந்தகாரத்திலும் மரண இருளிலும் வைக்கப்பட்டிருந்தது. ஒடுக்கத்திலும், இரும்பிலும் கட்டுண்டு கிடந்தார்கள். அவர்களுடைய இருதயத்தை அவர் வருத்தத்தால் தாழ்த்தினார். சகாயரில்லாமல் விழுந்து போனார்கள். (சங். 107:10,11)

- ஆண்டவருக்கு அடங்காமல் பாபேல் கோபுரத்தை கட்டி பேர் உண்டாக்க நினைத்தவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். (ஆதி. 11:1-9)

- ஆண்டவருக்கு அடங்காமல் இஸ்ரவேலர் நடுவில் கலகம் செய்த கோராகின் கூட்டம் பூமியின் பிளவில் புதையுண்டு போனார்கள். (லேவி. 16:1-32)

- ஆலய பிரமாணங்களுக்கு விரோதமாய் கலகம் பண்ணிய உசியா இராஜா குஷ்ட ரோகியாய் வெளியேற்றப்பட்டார். ((2 நாளா. 26:16-21)

- ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் அழிவின் திட்டமிட்ட ஆமான் குடும்பத்தோடு அழிவைக் கண்டான். (எஸ்தர் 7ம் அதி.)

அமெரிக்காவிலே “ஐவன்” என்ற பெண்மணி பண்ணை ஒன்றிலே பணிபுரிந்தார். மாலைப் பொழுதுகளில் வெளியே திரியும் திரளான கோழிக்குஞ்சுகளை அவள் கூண்டிலடைப்பது வழக்கம். அவளுடைய முயற்சியை எதிர்த்து கோழிக்குஞ்சுகள் அங்குமிங்கும் ஓடும். கூண்டுக்குள் விட்டாலும் கூண்டின் ஜன்னல்களைக் கொத்தி படபடக்கும்.

"இரவில் நடமாடும் கொடிய மிருகங்களிடமிருந்து பாதுகாக்கவே கூண்டிலடைக்கிறோம் என்பது இந்த கோழிக்குஞ்சுகளுக்கு புரியவில்லையே" என ஐவன் அடிக்கடி நினைத்துக் கொள்வதுண்டு.

அப்படியே ஆண்டவரின் பலத்த கைக்குள் வராத மனிதனுக்கு பாதுகாப்புமில்லை. பரலோக ஆசீர்வாதமுமில்லை. மாறாக நியாயத்தீர்ப்பே அவர்களுக்குக் காத்திருக்கிறது. ஆண்டவருடைய பலத்த கரத்துக்குள் வருவதெப்படி? அதற்கும் 2ம் சங்கீதம் வழிகாட்டுகிறது . . .

## 2. பரம இராஜாவை ஏற்றுக் கொள்ளுங்கள் :

***"நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணி வைத்தேன்." என்றார்.*** (சங். 2:7)

பிதாவாகிய தேவன் குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவை இராஜாவாகவே இவ்வுலகிற்கு அனுப்பினார். எனவே தான் ஏசாயா 9:6-7 ம் வசனங்களில் இவ்விதம் கூறப்பட்டுள்ளது.

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் (ராஜரீகம்) அவர் தோளின் மேலிருக்கும்."

. . . தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய இராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி" என எழுதப்பட்டுள்ளது. அவர் பாலகனாய் இவ்வுலகில் பிறந்த பொழுது "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" என்ற சாஸ்திரிகளின் கேள்வி எருசலேமை கலங்கடித்தது என்பதை நாம் அறிவோம். (மத். 2:1-6)

என்னுடைய இராஜ்யம் இவ்வுலகத்துக்குரிய

தல்லவென்று அவர் பிலாத்துவிடம் கூறினார். (யோவான் 18:36)

அவர் கடைசி நாளில் ராஜாதி ராஜாவாய் வெளிப்படுவார் என வெளி. 19:16ல் குறிப்பிடப்பட்டுள்ளது. தன்னைப்பற்றிய நற்செய்தியை இராஜ்யத்தின் சுவிசேஷம் என்றே அவர் குறிப்பிடுகிறார். (மத். 24:12)

இவ்வுலகில் பிறந்த அனைவரும் பாவ சுபாவத்தோடும், பிசாசின் ஆளுகைக்குள்ளும் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவ சுபாவத்துக்காகவும், பாவச் செயல்களுக்காகவும் மனம் வருந்தி, மனந்திரும்பி, நம் பாவத்துக்காக சிலுவையிலறையுண்டு மரித்து உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவிடம் தங்கள் பாவநிலைமையை அறிக்கையிட்டு ஜெபிக்க வேண்டும். அவரை உள்ளத்தில் அழைத்து அவருடைய விருப்பத்தின் படி வாழ அர்ப்பணிக்க வேண்டும்.

இனி நான் அல்ல. உலகம் அல்ல. பிசாசு அல்ல, நீரே என் இராஜா என அவரிடம் அறிக்கை செய்து அர்ப்பணிக்க வேண்டும். அவருடைய ஆவியானவரின் பெலன் பெற்று அவருடைய வார்த்தையின் படியே வாழ வேண்டும்.

“அந்த காரத்தினின்று நம்மை விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யத்துக்கு உட்படுத்தியிருக்கிறார்.” (கொலோ. 1:13) என பவுல் குறிப்பிடுகிறார்.

“எங்கள் தேவனாகிய கர்த்தாவே உம்மையல்லாமல் வேறே ஆண்டவன்மார் எங்களை ஆண்டார்கள். இனி உம்மை மாத்திரம் சார்ந்து உம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்துவோம்” ஏசா. 26:13 என்ற வசனத்தின்

படி நிகழ்காலத்தில் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்பவர்கள், நியாயத்தீர்ப்பின் காலத்தில் நிலை கலங்கிப் போவதில்லை. அவர்கள் நித்திய மகிமையை சுதந்தரிப்பார்கள்.

இயேசுக்கிறிஸ்துவை இராஜாவாக ஏற்றுக் கொண்டவர்கள் இவ்வுலகில் எவ்விதம் ஜீவிக்க வேண்டும் தெரியுமா?

## 3. பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள் :

***"பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள். நடுக்கத்துடனே களிகூருங்கள்."*** சங். 2:11

நமது தேவனாகிய கர்த்தர் எவ்வளவு பெரியவராகவும், பரிசுத்தராகவும் இருக்கிறார். ஆனால் மனிதர்களாகிய நாமோ எவ்வளவு சிறியவர்களாகவும், மிகவும் பலவீனமானவர்களாகவும் இருக்கிறோம். இதை மறவாமல் நினைத்திருந்தால் கர்த்தருக்குப் பயந்து வாழ முடியும்." என்றார் தேவ மனிதர் ஒருவர்.

நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானனால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார். (மல். 1:6)

"சேவித்தல்" என்ற பதம் பின்பற்றுதல், ஆராதித்தல், ஊழியம் செய்தல் என்ற பல அர்த்தங்களைக் குறிக்கிறது. பய பக்தியோடு அவரை ஆராதித்து பயபக்தியோடு அவருக்கு ஊழியம் செய்வதை ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கிறார். எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான் என்பதே சாலமோனின் கூற்று. (நீதி. 28:14)

1921ம் ஆண்டில் அமெரிக்க பேஸ்பால் விளையாட்டின் நட்சத்திர வீரராகத் திகழ்ந்தவர் மார்ட்டின்.

இவரை நல்லமிளகு மார்ட்டின் என வேடிக்கையாக அழைப்பார்கள். ஒரு நாள் பத்திரிக்கை நிருபரொருவர் மார்ட்டினிடம் கேட்டார். "ஐயா உமது பிரதான லட்சியம் என்ன?"

மார்ட்டின் சொன்னார், "என் பிரதான லட்சியம் மோட்சத்துக்கு செல்வது தான்?" நிருபர் சிரித்தார். பரிகாசத்துடன் கேட்டார்., "நீர் அங்கே போய் வீணை வாசிக்கப் போகிறீரா?"

மார்ட்டின் உறுதியாகச் சொன்னார்," நண்பரே இந்த காரியம் வேடிக்கையல்ல, கனத்துக்குரிய காரியத்தை பரியாசம் பண்ணுகிறவர்களின் பார்வையில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அர்த்தம். தினமும் வேதம் வாசிப்பதும், வேதம் சொல்வதை நம்புவதும் கேலிக் குரியதென்றால், மரணத்துக்குப்பின் மோட்சத்துக்குப் போக விரும்புவது பரியாசத்துக்குரிய தென்றால் இம்மை வாழ்க்கை ஒருகாசும் பெறாது."

ஆம், தேவனுக்குரிய காரியம் அலட்சியத்துக்கோ, பரியாசத்துக்கோ உரியதல்ல. அவை பயத்தோடு பின்பற்ற வேண்டியவை.

நியாயத்தீர்ப்புக்கு தப்ப . . .

- **ஆண்டவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**
- **பரம இராஜாவை ஏற்றுக் கொள்ளுங்கள்.**
- **பயத்தோடு அவரை சேவியுங்கள்.**

"அவரை அண்டிக் கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள்." (சங். 2:12)

## III. உபத்திரவத்தை எதிர்கொள்வது எப்படி?

*"தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பு இல்லையென்று என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள்."* (சங். 3:2)

ஜெர்மன் நாட்டு பிரபு ஒருவர் தனது கோட்டையின் இரு கோபுரங்களின் குறுக்கே அருகருகே வரும்படி பல நீண்ட கம்பிகளைக் கட்டி வைத்தார். இதன் மூலம், காற்றடிக்கும் போது இனிமையான இசையின் ஓசை கேட்கும் என்பது அவருடைய எண்ணம்.

அவர் நினைத்தபடியே நடந்தது. காற்று வீசாத நேரம் அங்கே அமைதி காணப்படும் தென்றல் காற்று வீசும் பொழுது கம்பிகள் மெல்ல அசைந்து மெல்லிய இசையெழுப்பும். ஆனால் பெருங்காற்றோ, புயல்காற்றோ வரும் போது அந்தக் கோட்டையருகேயுள்ள பள்ளத்தாக்கு முழுவதும் கேட்கும்படி அற்புதமான இசையின் சத்தம் எதிரொலிக்கும்.

தென்றல் காற்று போன்ற சுகமான நேரங்களை விட புயல் காற்றை போன்ற உபத்திரவ நேரங்களில் தான் தேவ மனிதர்களின் வாழ்வில் மகிமையான அற்புத அனுபவங்கள் ஏற்படுகின்றன. ஆம்! பாடுகளும், உபத்திரவங்களும் நம்மை சிதறடிக்க அல்ல. சிறப்பிக்கவே வருகின்றன.

ஆனால் உபத்திரவங்கள் வரும் போது உறுதியோடு நிற்போரை விட உருக்குலைந்து போவோரே மிகுந்திருக்கிறார்கள்.

நீதிமான்களுக்கு வரும் துன்பங்கள் அநேக மாயிருக்கும். (சங். 34:7) என்றெழுதிய தாவீதுக்கு வாழ்வில் பெரும் உபத்திரவம் ஏற்பட்டது. பெற்ற மகனாகிய அப்சலேமே தகப்பனாகிய தாவீதுக்கு விரோதமாக எழும்புகிறான்.இராஜ்யத்தை கைப்பற்றி தாவீதையும் கொல்ல முற்படுகிறான். (2 சாமு. 15,16)

இந்நிலையில் தான் தாவீது மூன்றாம் நான்காம் சங்கீதங்களைப் பாடுகிறார். இச்சங்கீதத்தின் தலைப்பை கவனித்தால், "தாவீதின் குமாரன் அப்சலோமுக்குத் தப்பி ஓடிப் போகையில் பாடின சங்கீதம்" என எழுதப்பட்டுள்ளது.

இந்த சங்கீதத்தின் மூலம் உபத்திரங்களை எப்படி எதிர்கொள்வது என்பதைக் கற்றுக் கொள்வோம்.

## I. உபத்திரவங்களை தாழ்மையோடு எதிர் கொள்ள வேண்டும்?

***"கர்த்தாவே என் சத்துருக்கள் எவ்வளவாய் பெருகியிருக்கிறார்கள். எனக்கு விரோதமாய் எழும்புவார்கள் அநேகர்."*** (சங். 3:1)

தாவீது கோலியாத்தை கொன்ற மாவீரர். ஆனால் தனக்கு விரோதமாய் தம் மகன் எழும்பும் போது அவர் தனக்கு ஏற்பட்ட எதிர்ப்பு பெரிது என்பதையும், விரோதமாய் எழும்பியிருப்போர் அநேகர் என்பதையும் தாழ்மையோடு ஒத்துக்கொள்கிறார். (சங். 3:1,2)

எருசலேமில் யுத்தம் ஏற்பட்டு அதனால் நகரத்துக்கு பாதிப்பு வரக்கூடாது என்பதற்காக அவர் அரண்மனையை விட்டு வெளியேறித் தப்பி ஓடினார். பயந்து ஓடினார் என பலரும் சொன்னாலும் தாவீது ஞானத்தோடு, தாழ்மையோடு இந்த முடிவை எடுத்தார். (2 சாமு. 15:14-16)

எத்தனையோ யுத்தங்களைக் கண்ட எனக்கு என் மகனாகிய அப்சலோம் எம்மாத்திரம் என அவர் பெருமையோடு இப்பிரச்சனையை அணுகாமல் தாழ்மையோடு நடந்து கொண்டார்.

உபத்திரவம் வரும் போது சுயம் தலையெடுக்கும். பண பலத்தால், சுய பலத்தால் எதையும் சாதிக்கலாம் என உந்துதல் ஏற்படும். ஆனால் தேவனுக்கு முன்பாக தாழ்மைப்படுவதும், மனிதர்களுக்கு முன்பாக தாழ்மையோடு முடிவுகளை எடுப்பதும் தகுந்த செயலாகும்.

மகனுக்கு பயந்து தகப்பனாகிய தாவீது ஓடிப் போகும் போது சாதாரண மனிதனாகிய சீமேயி என்பவன் ராஜாவாகிய தாவீதின் மேல் கல்லெறிந்து தூஷித்தான். அப்போது அவனை எதிர்த்து தாவீது எதையும் செய்யாமல் "ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைக்குப் பதிலாக எனக்கு நன்மையை சரிகட்டுவார்." எனத் தாழ்மையோடு கூறினார். (2 சாமு. 16:11-13)

உபத்திரவத்தின் உச்சத்தை கல்வாரிச் சிலுவையிலே இயேசுக் கிறிஸ்து கடந்து சென்றார். அங்கே அவருடைய பரிபூரணத் தாழ்மை வெளிப்பட்டதல்லவா? (பிலி. 2:6-8)

குழந்தை இல்லா நிலையிலே, பெனின்னாளால் நிந்திக்கப்பட்ட நிலையிலே, ஜெபிக்க வந்த அன்னாளை குடித்து விட்டு வந்திருப்பதாக குற்றம் சாட்டி பேசினார் ஏலி.

அன்னாள் கோபப்படாமல் தாழ்மையோடு பேசினார். அந்தத் தாழ்மைக்குரிய பலனை அவர் கண்டு மகிழ்ந்தார். (1 சாமு. 1:13-20)

ஜெர்மன் நாட்டில் "பாபர்ஹாசன்" என்ற ஊரில்

துறவிகளின் மடாலயம் ஒன்று அமைந்துள்ளது. அங்கே ஒன்றோடொன்று சிக்கிக் கொண்டிருந்த இரண்டு மான் கொம்புகள் வைக்கப்பட்டுள்ளன. விட்டுக் கொடுக்க முடியாமல் சண்டையிட்டு கொம்புகள் சிக்கி ஜீவனை இழந்த இரண்டு மான்களின் கதையை அக்கொம்புகள் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. நாம் அப்படி வாழக் கூடாது. தாழ்மையோடு நடந்து கொண்டால் தேவ கிருபை தேடி வரும். (நீதி. 3:34)

தாழ்மையுள்ள இதயம் . . .

- **வழக்காட விரையாது;**
- **பழிவாங்கத் துடிக்காது;**
- **கசப்புகளை வளர்க்காது;**
- **சதி செய்யாமல் சகிக்கும்;**

எல்லாவற்றிற்கும் மேலாக சர்வ வல்ல தேவனையே சார்ந்து நிற்கும். . . எப்படி?

## 2. உபத்திரவத்தை ஜெபத்தோடு எதிர்கொள்ள வேண்டும் :

***"நான் கர்த்தரை நோக்கிச் சத்தமிட்டுக் கூப்பிட்டேன். அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவி கொடுத்தார்."*** (சங். 3:4)

தேவ மனிதர்கள் சிரமமான ஜெப ஒழுங்கை கடைப்பிடிக்க வேண்டும். அதே நேரம் எப்பொழுதும் ஜெப சிந்தையாலும் நிறைந்திருக்க வேண்டும். ஜெப வாழ்வில் உற்சாகமாயிருக்கும் பலர் உபத்திரவம் வரும் போது உற்சாகமிழந்து விடுகிறார்கள். ஜெபித்து என்ன பயன் என ஊக்கமிழந்து விடுகிறார்கள். ஜெபிக்கும் வழிகளை விட்டு விட்டு உலக வழிகளை நாடத் தொடங்குகிறார்கள்.

தாவீதைப் பாருங்கள். பெற்ற மகனாலே குடும்ப குழப்பம்; இராஜ்யத்திலும் குழப்பம், சாதாரண மானவர்கள் அவரை கல்லெறிகிறார்கள்; வனாந்தரத்துக்கு ஓட வேண்டிய நிலை. ஆனால் அவரோ தேவனை நோக்கிக் கூப்பிட்டு தன் ஜெப வாழ்வை உறுதிப்படுத்துகிறார்.

உபத்திரவ நேரம் வழக்கமான ஜெப நேரத்தை விட அதிகமாக ஜெபிக்க வேண்டும். உபவாச ஜெபம், ஒன்றிணைந்த ஜெபம், குழு ஜெபம், குடும்பமாய் ஜெபம். இவையெல்லாம் அதிகமாக வேண்டும். கல்வாரிப் பாடுகளுக்கு முன்பு கெத்சமனேயின் ஜெப நேரமே இரட்சகருக்குப் பெலன் அருளியதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். (லூக். 2:40-43)

உபத்திரவ நேரம் உலக வல்லமைகள் ஒதுங்கிப் போகும்; செயலற்றுப் போகும். உன்னதரை நோக்கி ஜெபிக்கும் போதோ உள்ளான வல்லமை பெரும்; உபத்திரவமும் ஆசீர்வாதமாய் மாறும்.

"நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறு உத்தரவு அருளினீர். என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்." (சங். 1383) என்பது தாவீதின் அனுபவம்.

இங்கிலாந்தில் வாழ்ந்த போதகர் ஒருவர் அமெரிக்காவுக்கு செல்லும் போதெல்லாம் தன் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்குவார். ஒருமுறை பல உபத்திரவங்களினால் அவருள்ளம் மிகவும் பாரம் கொண்டிருந்தது. மனபாரத்தோடு அமெரிக்காவில இருக்கும் தன் நண்பரின் வீட்டுக்கு வந்தவர் மாடியிலுள்ள தங்கும் அறையை நோக்கி படியேறிச் சென்றார். அவர் கரத்திலிருந்த பெட்டி மிகவும் பாரமாக இருந்தது. அதை விட அவருள்ளம் அதிக பாரத்தினாலும், கவலையினாலும் நிறைந்திருந்தது.

மாடியில் தங்கும் அறைக்குள் நுழைவதற்கு முன்பாக கதவில் மாட்டப்பட்டிருந்த வார்த்தை யொன்று அவர் கவனத்தைக் கவர்ந்தது.

அதில் . . .

"நீங்கள் அதைக் குறித்து ஜெபித்திருக்கிறீர்களா?" என எழுதப்பட்டிருந்தது.

தேவ மனிதருக்கு அந்த வார்த்தை ஒரு புத்துணர்வைக் கொடுத்தது. அங்கிருந்த நாட்களில் அதிகம் ஜெபத்தில் செலவிடலானார். உள்ளத்தில் சமாதானத்தையும், உபத்திரவத்தில் பல நன்மைகளையும் அவர் கண்டு கொண்டார்.

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையுங் குறித்து . . . ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்." பிலி. 4:6

தாழ்மையோடு, ஜெபத்தோடு மட்டுமல்ல உபத்திரவத்தை நாம் எதிர் கொள்ள வேண்டிய மூன்றாவது முறை . . .

## 3. உபத்திரவத்தை நிச்சயத்தோடு எதிர் கொள்ளுங்கள் :

***"இரட்சிப்பு கர்த்தருடையது. தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய ஜனத்தின் மேல் இருப்பதாக."*** (சங். 3:8)

உபத்திரவத்தில் தான் அழிந்து போகப் போவதில்லை. நிச்சயம் ஆண்டவர் தன்னை விடுவிப்பார். ஆண்டவருடைய ஆசீர்வாதம் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் அருளப்படும் என்ற நிச்சயத்தோடு

தாவீது மேற்கண்ட வார்த்தையைக் கூறினார்.

இதையே இன்னொரு சங்கீதத்தில் அவர் குறிப்பிடும் போது, "மனுஷரை எங்கள் தலையின் மேல் ஏறிப் போகப் பண்ணினீர்; தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம். செழிப்பான இடத்தில் எங்களைக் கொண்டு வந்து விட்டீர்." எனக் கூறுகிறார். (சங். 66:12)

உபத்திரவத்தின் பாதையை கடந்து செல்லும் ஒவ்வொருவரும் இவ்வித நிச்சயத்தோடு உறுதியாயிருக்க வேண்டும். பாடுகளுக்கு முடிவு உண்டு; பாடுகளுக்குப் பலனுண்டு; பாடுகளுக்குப் பின் உயர்வுண்டு என்பதை திருமறை நமக்கு வலியுறுத்துகிறது. அதை நிச்சயமாய் நாம் நம்பலாம். அந்த நிச்சயத்தோடு தான் நாம் உபத்திரவத்தை எதிர் கொள்ள வேண்டும். (2 தீமோ. 2:12)

"நிச்சயமாகவே முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண் போகாது." என்பது சாலமோனின் சத்திய மொழி. (நீதி. 23:18)

உலகில் பெரும் நீர்வீழ்ச்சி நயகரா நீர் வீழ்ச்சி. அந்த நீர் வீழ்ச்சியின் கீழ் சுழித்து ஓடும் நீரின் குறுக்கே "ஜாக்ஸன்" என்பவரும், அவரின் சகோதரியும் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். நீரின் வேகத்தால் படகு அங்குமிங்கும் ஆடியது. ஜாக்சனின் சகோதரி பயந்து நடுங்கினார். ஜாக்ஸன் சகோதரியின் கையை பிடித்துக் கொண்டார். படகோட்டியிடம் கேட்டார்.

"இந்த ஆற்றை எத்தனை முறை கடந்து சென்றிருக்கிறீர்கள். எப்போதாவது விபத்து நடந்திருக்கிறதா?"

படகோட்டி சொன்னார், "ஐயா 12 ஆண்டுகளாக இந்த ஆற்றில் எண்ணிக்கைக்கு அடங்காத முறை படகோட்டியிருக்கிறேன். படகு விபத்தோ, உயிர் சேதமோ ஒரு முறை கூட ஏற்படட்டதில்லை."

தன் சகோதரியை திரும்பிப் பார்த்த ஜாக்சன், "படகோட்டி சொன்னதைக் கேட்டாயா? படகோட்டியின் மேல் நம்பிக்கை இல்லாவிட்டால் நீயே படகோட்டு. இல்லாவிட்டால் என்னைப் போல் நம்பிக்கையோடு அமர்ந்திரு." என்றார். சகோதரிக்கு பயம் நீங்கி நம்பிக்கையின் நிச்சயம் பிறந்தது.

இயேசுக்கிறிஸ்து சர்வ வல்லமையுள்ளவர் அவர் நம் வாழ்க்கைப் படகை உபத்திரவமாகிய ஆற்றினோடே பத்திரமாய் நடத்தி செழிப்பான இடம் நோக்கி கொண்டு செல்வார். இந்த நிச்சயம் இருந்தால் தான் யோபு, "அவர், என்னை சோதித்த பின் பொன்னாக விளங்குவேன்." என்றார். (யோபு 23:10)

உபத்திரவம் வரும் போது . . .

- **தாழ்மையோடு எதிர் கொள்ளுங்கள்.**
- **ஜெபத்தோடு எதிர் கொள்ளுங்கள்.**
- **நிச்சயத்தோடு எதிர் கொள்ளுங்கள்.**

"நீதியினிமித்தம் துன்பப் படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது." (மத். 5:10)

## IV. ஆண்டவரிடத்திலிருந்து நீதியைப் பெற்றுக் கொள்வதெப்படி?

"*என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவி கொடும்.*" (சங். 4:1)

நான்காம் சங்கீதம் முதலாம் வசனத்திலே ஆண்டவரை "என் நீதியின் தேவனே" (**My righteous God**)" என அழைக்கிறார் தாவீது. தாவீதுக்கு இஸ்ரவேலின் முதல் அரசனாகிய சவுலாலும், சில நண்பர்களாலும், சத்துருக்களாலும், பெற்றெடுத்த பிள்ளைகளாலும் பல அநீதிகள் இழைக்கப்பட்டன. ஆனால் அனைத்து சூழ்நிலைகளிலும் ஆண்டவர் அவருக்கு ஆதரவாக இருந்து தன் நீதியை வெளிப்படுத்தினார்.

இன்று நீதி மறுக்கப்பட்டு, நியாயம் மறைக்கப்பட்டு அநீதி எங்கும் தலைவிரித்தாடுவதைக் காண்கிறோம். நீதிஸ்தலத்தையும் கண்டேன். அங்கே அநீதி இருந்தது என்றார் ஞானி. (பிரச. 3:16) ஆனால் நம்முடைய ஆண்டவர் நீதி செய்கிறவர். நீதியின் மேல் பிரியப்படுவார் என சங். 11:7 குறிப்பிடுகிறது. சர்வலோக நியாதிபதி நீதி செய்திருப்பாரோ? (ஆதி. 18:25) என ஆபிரகாம் குறிப்பிடுகிறார். நம்முடைய வாழ்வில் தேவனுடைய நீதியைப் பெற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து நான்காம் சங்கீதத்திலிருந்து மூன்று காரியங்களைத் தியானிக்கலாம்.

## 1. கோபங் கொண்டாலும் அமர்ந்திருங்கள்!

**"நீங்கள் கோபங் கொண்டாலும், பாவஞ் செய்யாதிருங்கள். உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசி கொண்டு அமர்ந்திருங்கள்."** (சங். 4:4)

நீதி மறுக்கப்படும் போது, அநீதி இழைக்கப்படும் போது நமக்கு இயல்பாகவே கோபம் வந்து விடுகிறது. அப்படிப்பட்ட கோபத்தை அடக்கி நாம் அமர்ந்திரா விட்டால் அந்தக் கோபம் பல தவறான செயல்களைச் செய்யும்படி நம்மைத் தூண்டி விடும்.

நாபால் **(Nabal)** என்பவனுக்கு தாவீது பல விதத்தில் உதவிகரமாயிருந்தார். ஆனால் தாவீதுக்கு உதவி தேவைப்பட்ட நேரம் நாபால் தாவீதை அலட்சியம் பண்ணி அவதூறாய் பேசுகிறான். நாபாலின் அநீதியைக் கண்ட தாவீது அவனைக் கொல்லும் படி கோபத்தோடு புறப்பட்டார். ஆனால் நியாயத்தின் நெறிமுறை அறிந்த நாபாலின் மனைவி தாவீதோடு வந்து தாழ்மையாய் பேசினாள். தாவீதும் தன் கோபத்தை அடக்கி அமர்ந்திருந்தார். கர்த்தர் தாவீதுக்காக நாபாலிடம் வழக்காடினார். அவனை வாதித்து தண்டித்தார் தேவநீதி வெளிப்பட்டது. (1 சாமு. 25:2-39)

கோபத்தின் வெளிப்பாடுகள் மதியீனமான செயல்களாயிருக்கும். எனவே தான் மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான். ஞானியோ அதை பின்னுக்கு அடக்கி வைக்கிறான். (நீதி. 29:11) என எழுதப்பட்டுள்ளது. ஆங்கில வேதாகமத்தில் கோபத்தை வெளிப்படுத்துகிறான் என்ற அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளது. (A fool gives ful vent to his anger but wise man keeps himself under control. (Pro. 29:11 (NIV))

மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே என்ற யாக்கோபின் ஆலோசனையை மனதில் கொண்டு (யாக். 1:21) கோபத்தின் குமுறலை அடக்கி அமர்ந்திருப்பது ஞானம் நிறைந்த காரியம் அப்படி அமர்ந்திருந்தால் தேவன் செயலாற்றுவார். தேவநீதி வெளிப்படும்.

## 2. நீதியின் பலிகளைச் செலுத்துங்கள்!

*"நீதியின் பலிகளைச் செலுத்தி . . ."* (சங். 4:5)

நீதியின் பலிகள் என்பது பழைய ஏற்பாட்டுக் காலத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் ஆண்டவருக்கு செலுத்திய பலவித பலிகளைக் குறிப்பிடுகிறது. பலிகள் ஆராதனையோடு தொடர்புடையன. நீதியின் பலிகளை செலுத்துங்கள் என்பது ஆண்டவரை ஆராதிப்பதிலும், அவருடைய காரியங்களிலும் நாம் தொடர்ந்து உற்சாகமாய் செயல்பட வேண்டும் என்பதை வெளிப் படுத்துகின்றது. சிலர் அநீதிகளை சந்திக்கும் போது ஆண்டவருடைய காரியங்களில் சோர்ந்து போய்விடுகிறார்கள். நீதியின் தேவன் நம் பட்சத் திலிருக்கும் போது நாம் ஆவிக்குரிய காரியங்களில் சோர்ந்து போகக் கூடாது. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம் என்ற பவுலின் ஆலோசனை (கலா. 6:9) நாம் பின்பற்றத்தக்கது.

தமிழ் நாட்டுக்கு முதலில் வந்த மிஷனெரியான சீகன்பால்க்கை தரங்கையிலிருந்த மேலை நாட்டு கவர்னர் ஒருவரே அநியாயமாய் சிறையிலடைத்து விட்டார். இந்த அநீதியின் நடுவிலும் சீகன்பால்க் ஜெபத்திலும், ஊழிய தரிசனத்திலும் மேலோங்கினார். சில மாதங்களில் அவரை சிறையிலடைத்த கவர்னரே வெட்கப்பட்டு, அவரை விடுதலை செய்து விட்டார். பவுலையும் சீலாவையும் பாருங்கள். பிலிப்பு பட்டணத்திலே அவர்கள் ஒரு அசுத்த ஆவியை

துரத்தியதற்காக அநியாயமாய் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்டாலும் சோர்ந்து போகாமல் தேவனுக்கு துதி செலுத்திப் பாடினார்கள். தேவன் அவர்களுக்காக செயல்பட்டார். மறுநாள் விடுதலையும் பெற்றார்கள். (அப். 6:16-39) அநீதி இழைக்கப்படுகிறதா? ஆண்டவரின் காரியத்தில் உற்சாகமாகவே இருங்கள்.

## 3. கர்த்தரை நம்பியிருங்கள் :

**“கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருங்கள்.”** (சங். 4:5)

ஆளுகை செய்கிறவனுடைய முக தரிசனத்தை தேடுகிறவர்கள் அநேகர் ஆனாலும் அவனவனுடைய நியாயம் கர்த்தராலே வரும். (நீதி. 29:26) என்றார் ஞானி. எனவே நமக்கு நீதி கிடைக்கும் படி உலகத்தின் சத்துவங்களை நம்பாமல் நம்முடைய நீதிக்காக தேவனை நம்பியிருப்பது நலம்.

யோசேப்பை அடிமையாக விற்று அவருடைய அண்ணன்மாரே அநீதி செய்தார்கள்.

பொய்க்குற்றம் சாட்டி போத்திபாரின் மனைவி அநீதி செய்தாள். செய்யாத தவறுக்கு சிறையிலடைக்கப்பட்டு அவருக்கு அநீதி இழைக்கப்பட்டது. ஆனால் யோசேப்பு தேவனை நம்பியிருந்தார். தேவன் அவருக்கு நீதி செய்து யோசேப்பை எகிப்தின் அதிபதியாய் உயர்த்திவிட்டார். (ஆதி. 37:28, 39:12-20, 41:41-44)

இறுதியாக தாவீது கொடுக்கும் ஆலோசனையை உங்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன். உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து அவர் மேல் நம்பிக்கையாயிரு. உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்டப் பகலைப் போலவும் விளங்கப் பண்ணுவார். (சங். 37:4,5)

நம் அனைவர் வாழ்விலும் தேவநீதி வெளிப்படுவதாக.

# V. தேவனை நேசிப்பது எப்படி?

*"உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூறுகிறவர்களாக."* (சங். 5:11)

சங்கீதம் ஐந்திலிருந்து நாம் வாசித்த மேற்கண்ட வசனம் ஆண்டவரை நேசிக்கிறவர்களையும் ஆண்டவரை நேசிக்கிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதத்தையும் பற்றிக் குறிப்பிடுகிறது. ஆண்டவரை நேசிப்பது எப்படி என்பதைக் குறித்து இச்சங்கீதத்திலிருந்து மூன்று குறிப்புகளை காணலாம்.

## 1. ஆலய ஆராதனை மூலம் ஆண்டவரை நேசிக்கலாம் :

சங்கீதம் 5;7 ஐ வாசித்துப் பாருங்கள். ***"நானோ உமது மிகுந்த கிருபையினாலே உமது ஆலயத்திற்குள் பிரவேசித்து உமது பரிசுத்த சந்நிதிக்கு நேரே பயபக்தியுடன் பணிந்து கொள்வேன்."*** என்று தாவீது குறிப்பிடுகிறார்.

பயபக்தியோடு ஆண்டவருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்து பணிந்து கொள்வது ஆண்டவரை நேசிப்பதின் ஒரு வெளிப்பாடாகும். ஆலயத்திற்கு அலட்சியமாக, நடைமுறைக்காக, பெருமையோடு இன்னும் பலவித நோக்கங்களுக்காக வருவோர் பலருண்டு. ஆனால் பயபக்தியோடு ஆலயத்திற்குள் வந்து பணிந்து கொள்வோரே ஆண்டவரை உண்மையாய் நேசிப்பவர்கள். அவர்கள் களிகூறுதலின் ஆசீர்வாதத்தை பெறுவார்கள்.

புதிய ஏற்பாட்டில் அன்னாள் என்ற பெண்மணி இளம் வயதில் கணவனை இழந்த நிலையில் ஆலயத்தில் வந்து இரவும் பகலும் ஆண்டவரை ஆராதித்தாள். பல வருடங்களுக்குப் பின் இயேசு கிறிஸ்துவாகியப் பாலகனைக் காணும் பாக்கியம் பெற்றாள். (லூக். 2:36-38)

***“இதை விட களிப்பான ஆசீர்வாதம் வேறு என்ன இருக்க முடியும்.”*** (லூக். 2:36-38) ஆம், ஆலயத்தில் பயபக்தியோடு பணிந்து கொள்கிறவர்கள் ஆண்டவரை உண்மையாக நேசிக்கிறவர்கள்.

## 2. அர்ப்பணத்தின் மூலம் ஆண்டவரை நேசிக்கலாம்

***“என்னை உம்முடைய நீதியிலே நடத்தி எனக்கு முன்பாக உம்முடைய வழியை செவ்வைப்படுத்தும்.”*** என சங். 5:8ல் வாசிக்கிறோம்.

மனுஷனுடைய சுயநீதி அழுக்கான கந்தை என ஏசாயா கூறுகிறார். (ஏசா. 64:6) மனுஷனுடைய வழிகள் மரண வழிகள் என (நீதி. 14:12) ஞானியாகிய சாலமோன் குறிப்பிடுகிறார். ஆனால் ஆண்டவரை உண்மையாய் நேசிக்கிறவர்கள் தங்கள் சுயநீதியை நம்பியிருக்க மாட்டார்கள். தங்களுக்குச் செம்மையாய் தோன்றுகிற சுய வழியில் ஓட மாட்டார்கள். அவர்கள் தேவனுடைய நீதிக்கும், தேவனுடைய வழிக்கும் தங்களை ஒப்புக் கொடுப்பார்கள்.

இஸ்ரவேலின் முதல் அரசனாகிய சவுல் தன் சுயநீதியை நம்பியிருந்தவன். பலவித துணிகர பாவங்களை செய்து விட்டு அவன் தன்னைத்தான் நீதிமான் என நினைத்துக் கொண்டான். தேவனுடைய

வழியை விட தான் நினைத்த வழி தான் சரியானது என நினைத்து செயல்பட ஆரம்பித்தான். இவன் தேவனை விட தன்னை அதிகமாய் நேசித்தவன். இவன் தேவனுடைய களிப்பை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

ஆனால் தாவீது தேவனை நேசித்தார். அவர் தன்னை தேவனுடைய நீதிக்கும் தேவ வழிக்கும் ஒப்புக் கொடுத்திருந்தார். தேவன் அவரையும், அவர் வம்சத்தையும் களிகூறும் அனுபவங்களில் வழி நடத்தினார். (தேவனுடைய வழியை வேத வசனத்தில்அறியலாம்.)

ஆம், தேவனுடைய நீதிக்கும், வழிக்கும் ஒப்புக் கொடுப்பதின் மூலம் தேவனை நாம் நேசிக்கலாம்.

## 3. ஆண்டவரை நம்புவதன் மூலம் அன்பை வெளிப்படுத்தலாம் :

*"உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து எந்நாளும் கெம்பீரிப்பார்களாக."* என சங். 5:1ல் வாசிக்கிறோம்.

இந்த வசனத்தை அடிப்படையாக வைத்து ஆண்டவரை நேசிக்கிறவர்கள் அவரை நம்புவார்கள் என நாம் கூறலாம். "அன்பு சகலத்தையும் நம்பும்" என்று 1 கொரி. 13:7ல் வாசிக்கிறோம். அன்பு தணியும் இடத்திலே தான் அவ நம்பிக்கை உருவாகிறது.

யோசேப்பு தேவனை அதிகமாக நேசித்தவர். அவர் தன் வாழ்வில் பலவித உபத்திரவங்களை சந்தித்தாலும், தேவன் பேரில் வைத்த அன்பினால் நம்பிக்கையோடு அமர்ந்திருந்தார். உலகத்தின் நேசம் போத்தி போரின்

மனைவி வடிவில் அவருக்கு வலை வீசிய பொழுது அதை உதறித் தள்ளினார். உலக நேசத்தை அவருக்குள்ளிருந்த தேவநேசம் மேற்கொண்டது. அதனிமித்தம் சிறைச்சாலையின் உபத்திரவமும், விபச்சாரக்காரன் என்ற குற்றச் சாட்டு வந்தாலும் தேவனை நம்பியிருந்தார். களிகூறுதலின் அனுபவத்தையும் பெற்றுக் கொண்டார்.

தேவ பிள்ளைகளே! ஆண்டவரை நேசியுங்கள் . . .

**- ஆலயத்தில் பயபக்தியோடு பணிந்து கொள்வதின் மூலம்!**

**- ஆண்டரின் நீதிக்கும் வழிகளுக்கும் ஒப்புக் கொடுப்பதின் மூலம்!!**

**- ஆண்டவரை நம்பியிருப்பதின் மூலம்!!!**

"ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூராமற் போனால் அவன் சபிக்கப் பட்டவனாயிருக்கக் கடவன்." (1 கொரி. 16:22)

*சிந்தனைக்கு . . .*

**ஆண்டவரை உண்மையாக நேசித்தால்**
**ஆண்டவரின் ஆசீர்வாதங்களை**
**உண்மையாகவே பெற முடியும்!**

## VI. சிட்சையை சகிப்பது எப்படி?

*"கர்த்தாவே உம்முடைய கோபத்திலே என்னை கடிந்து கொள்ளாதேயும்."* (சங். 6:1)

இரண்டாவது உலகப் போர் நடைபெற்ற நேரம். அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் போர் வீரர்களுக்கு பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

போர் வீரர்கள் தடை ஓட்டம் தாண்டும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். ஆழம் குறைந்த ஒரு சிறிய குளத்தை அவர்கள் ஒரு கயிற்றின் துணையோடு தாண்ட வேண்டியிருந்தது. சூரிய வெப்பம் அதிகமாயிருந்த படியால் பலரும்வேண்டுமென்றே குளத்தில் குதித்துக் கொண்டிருந்தார்கள். பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தவர் குளத்தில் முதலையொன்றை கொண்டு வந்து விட்டார். அதன் பின் யாரும் குளத்தில் விழ வில்லை. முதலைக்கு பயந்து ஒழுங்காக குளத்தை தாண்டினர்.

இப்படித்தான் ஆன்மீக வாழ்வில் நம்மை சரிப்படுத்தவும், நமது தவறுகளை உணர்த்தவும் ஆண்டவர் சிட்சைகளை அனுமதிக்கிறார். அப்படிப்பட்ட ஒரு சிட்சையின் நேரம் தாவீது பாடிய சங்கீதம் ஆறாம் சங்கீதமாகும். இச்சங்கீதம் சிட்சையின் நேரம் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து பேசுகிறது. எப்படி . . . ?

## 1. சிட்சையின் நேரம்
## தேவனை நோக்கித் திரும்புங்கள் :

***"என் மேல் இரக்கமாயிரும். கர்த்தாவே நான் பெலனற்றுப் போனேன். என்னைக் குணமாக்கும் கர்த்தாவே என் எலும்புகள் நடுங்குகிறது."*** (சங். 6:2) பிள்ளைகள் தவறு செய்யும் போது பெற்றோர்கள் சிட்சிக்கிறார்கள். சிட்சையின் நோக்கம் மூன்று. . .

- தான் செய்த தவறை உணர வேண்டும்.
- திரும்பவும் அந்த தவறை செய்யக்கூடாது.
- இனிமேல் சரியான வழியில் நடக்க வேண்டும்.

ஆண்டவரும் இதே நோக்கத்தில் தான் நம்மை சிட்சிக்கிறார். கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். எபி. 12:6 நம்முடைய தவறுகளை உணர்வதும், அதை ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்டு திருந்துவதும் சிட்சையின் நேரம். நாம் செய்ய வேண்டிய சிறப்பான செயல்களாகும். ஆனால் அநேகர் . . .

முணுமுணுக்கிறார்கள்; முறுமுறுக்கிறார்கள்; மனது புண்படப் புகைந்து தவிக்கிறார்கள். மகிமையான ஆண்டவரையே வேண்டாமென்று மறுதலித்து விடுகிறார்கள்.

ஆனால் . . .

- தகப்பனை ஏமாற்றிய யாக்கோபு மகன்களால் ஏமாற்றப்படுகிறார். (ஆதி. 27:18-29, 37:31-36)

- கன்மலையைப் பார்த்து பேச வேண்டிய மோசே அதை அடித்ததால் சிட்சை வந்தது. அவர் கானானில்

பிரவேசிக்கக் கூடாமற் போயிற்று. (உபா. 32:48-52) பத்சேபாலிடம் பாவம் செய்த தாவீதினிமித்தம் பிறந்த குழந்தை செத்துப் போனது. (2 சாமு. 12:15-23)

இவையெல்லாம் தேவனுடைய சிட்சைகளே. இப்படிப்பட்ட சிட்சையின் நேரம் மோசேயோ, யாக்கோபோ, தாவீதோ தேவனை விட்டு தூரம் போகவில்லை. தேவனே நோக்கியே திரும்பினார்கள்.

கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும் என்ற தாவீதைப் போல (சங். 25:11) நாமும் தேவனை நோக்கித் திரும்புவோமாக.

## 2. சிட்சையின் நேரம் கசப்புகளை கர்த்தரிடம் ஊற்றி விடுங்கள் :

*"என் ஆத்துமா மிகவும் வியாகுலப்படுகிறது; கர்த்தாவே எதுவரைக்கும் இரங்காதிருப்பீர்."* (சங். 6:3)

சிட்சையையாரும் விரும்புவதில்லை. ஏனெனில் அதன் வலிகளும், வேதனைகளும் நம்மை துக்கசாகரத்தில் ஆழ்ந்தி விடுகின்றன. எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்" என எபிரேய நிருபக்காரன் குறிப்பிடுகிறார். (எபி. 2:11) சிட்சையின் சஞ்சலங்களை தாவீது கீழ்க்காணும் முறைகளில் விவரிக்கிறார்.

- பெலனற்றுப் போனேன். (6:2)
- என் எலும்புகள் நடுங்குகிறது. (6:2)
- என் ஆத்துமா வியாகுலப்படுகிறது. (6:3)
- பெருமூச்சினால் இளைத்துப் போனேன். (6:6)
- கண்ணீரால் கட்டிலை நனைக்கிறேன். (6:6)
- கண்கள் குழி விழுந்து மங்கிப் போயிற்று. (6:7)

இந்த சஞ்சலங்களையெல்லாம் அவர் தேவனிடத்தில் அறிக்கையிட்டு, ஆண்டவரிடத்தில் கசப்புகளை ஊற்றிவிடும் காரியத்தைக் காண்கிறோம்.

நமது வேதனைகளையும், கசப்புகளையும் நமக்குள் அடக்கிக் கொண்டிருந்தால் மன அழுத்தம் வரும்; அதை மனிதரிடத்தில் பகிர்ந்து கொண்டால் வேதனை கூடும்; குறையாது. ஆனால் ஆண்டவரிடம் ஊற்றிவிடும் போது ஆறுதலும், சமாதானமும் உள்ளத்தை நிரப்பும். எனவே தான் நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்." எனத் தாவீது குறிப்பிடுகிறார். (சங். 51:17)

நெருக்கம் தாங்க முடியாமல் "ஸ்டான்" என்ற பெயருடைய வாலிபன் புலம்பினான்; தேவன் என்னை ஏமாற்றி விட்டார். நான் செத்துப் போனால் நல்லது." இதைக் கேட்ட அவனுடைய சபைப் போதகர் சொன்னார், "ஸ்டான் உன் அழுகையையும், முறுமுறுப்பையும் தேவனிடம் மாத்திரம் வைத்துக் கொள்." இந்த வார்த்தை ஸ்டானுக்கு ஒரு புது விடியலைக் கொடுத்தது.

"தைரியமாய் கிருபாசனத்தண்டை சேரக் கடவோம்." எபி. 4:16

## 3. சிட்சையின் நேரம்
## தேவ கிருபையை சார்ந்து கொள்வோம்.

***"திரும்பும் கர்த்தாவே என் ஆத்துமாவை விடுவியும். உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்."*** (சங். 6:4)

சாத்தானுடைய தூண்டுதலினாலே பெருமைக்கு இடம் கொடுத்து ஜனங்களைத் தொகையிட்டு கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார் தாவீது.

அவரை சிட்சிக்கும்படி அவருக்கு முன் மூன்று

தண்டனைகளை தேவ வார்த்தையின் படி முன் வைத்தார் தீர்க்க தரிசி. மூன்று வருஷப் பஞ்சமா? மூன்று மாத சங்காரமா? மூன்று நாள் கர்த்தருடைய தூதனின் சங்காரமா எனக் கேட்ட பொழுது, நான் கர்த்தருடைய கையில் விழுவேனாக. அவருடைய இரக்கங்கள் மகா பெரியது" என்றார் தாவீது. (1 நாளா. 21:1-15)

அநேகர் விழுந்து போன நிலையை உணருகிறார்கள். ஆனால் இனி மன்னிப்பு உண்டா என சந்தேகிக்கிறார்கள். இனி தேவன் என்னை விரும்பமாட்டார் என முடிவெடுத்து விடுகிறார்கள்.

இஸ்ரவேலின் பாவங்களை கண்டித்த மீகா, "மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்?" என்ற நம்பிக்கையின் வார்த்தையையும் நமக்குக் கொடுக்கிறார். (மீகா 7:18)

வேத ஆய்வாளர்கள் நிறைந்த கூட்டமொன்றில் கிறிஸ்தவத்தின் தனிச்சிறப்பு என்ன என்பதைப் பற்றி பலத்த தர்க்கம் நடந்து கொண்டிருந்தது. C.S. லூயிஸ் என்பவர் அங்கு வந்தார். "கிறிஸ்தவத்தின் தனிச்சிறப்பை குறிப்பிடுவது மிக எளிது அது கிருபை (Grace)" என்றார்.

ஆம்! மன்னிக்கும் கிருபை, மாற்றும் கிருபை, மாபெரும் அந்த கிருபையை சார்ந்து கொண்டால் சிட்சை நம்மை சிங்காசனத்தை நோக்கி சிறகடிக்க வைக்கும். "கர்த்தாவே உம்முடைய தயவினிமித்தமும், என்னை உமது கிருபையின்படியே நினைத்தருளும்." எனத் தாவீதோடு இணைந்து ஜெபிப்போம். (சங். 25:7)

சிட்சைகளின் நேரம் . . .

- **தேவனை நோக்கித் திரும்புங்கள்!**
- **கர்த்தரிடம் கசப்புகளை ஊற்றிவிடுங்கள்.!**
- **கர்த்தரின் கிருபைகளை சார்ந்து கொள்ளுங்கள்.!**

## VII. தேவ மனிதர்களாய் நடந்து கொள்வது எப்படி?

ஜப்பான் நாட்டுக்கு புரட்டெஸ்டன்ட் மிஷனெரி ஒருவர் முதன் முதலாகச் சென்றார். அவரது ஊழியத்தில் கவரப்பட்ட ஜப்பானின் அரசர் கிறிஸ்தவ போதனைகள் உண்மையாக இருந்தால் தனது நாட்டின் அதிகாரப் பூர்வமான மதமாக கிறிஸ்தவத்தை அறிவிப்பதாகச் சொன்னார். அவர் தனது நாட்டிலிருந்து ஐந்து சிறந்த அறிஞர்களை ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

அவர்கள் சென்ற இடத்திலெல்லாம் கிறிஸ்தவர் களையும், ஆலயங்களையும், நிறுவனங்களையும் கவனித்து திரும்ப முற்பட்டார்கள். பேராயர் ஒருவர் ஜப்பானிய அறிஞர்களைப் பார்த்து, "உங்கள் மன்னருக்கு என்ன செய்தியை கொண்டு போகப் போகிறீர்கள்." எனக் கேட்டார். அவர்கள், "உங்கள் புத்தகம் **(Bible)** மிகச் சரியானது தான். ஆனால் அது நடைமுறையில் செயல்படுத்தப்படவில்லை. இதைத்தான் எங்கள் மன்னரிடம் சொல்லப் போகிறோம்." என்றார்கள்.

எவ்வளவு பரிதாப நிலை இது. வேதாகமத்தை கையில் சுமப்பதல்ல தேவமனிதனின் அடையாளம். அதை தன் வாழ்வில் நடைமுறைப்படுத்துவது தான், தேவ மனிதனின் சரியான அடையாளம்.

வேதாகமத்தை நடைமுறைப்படுத்தும் தேவ மனிதனாய் நாம் நடந்து கொள்வது எப்படி என்பதை 7ஆம் சங்கீதம் நமக்கு படம் பிடித்து காட்டுகிறது. எப்படி . . . ?

## 1. தேவ மனிதன் ஆண்டவரை புரிந்து வாழ வேண்டும் :

*"நீதியுள்ளவராயிருக்கிற தேவரீர் இருதயங்களையும், உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர்."* (சங். 7:9)

ஞானி ஒருவரின் சீடனாக வாலிபனொருவன் ஆசைப்பட்டான். அவனைப் பார்த்து "எனக்கு பிரியமான காரியம், பிடிக்காத காரியம், எனது கொள்கை கோட்பாடு, குணநலன்கள் எல்லாவற்றையும் நீ நன்கு அறிந்திருந்தால் நீ எனக்கு சீடனாக என்னைப் பின் பற்றுவது எளிதான காரியம். இல்லாவிட்டால் கடினம் தான்." என்றார்.

ஆண்டவரைப் புரிந்து கொண்ட மனிதர்கள் தான் ஆண்டவருடைய பிள்ளையாக வாழ முடியும். எனவே தான், "கிறிஸ்துவை அறிகிற அறிவில் வளருங்கள்" என பேதுரு அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். (2 பேதுரு 3:18)

வேதத்தை வாசித்து தியானிக்க, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய, கீழ்ப்படிய தேவனைப் பற்றி அறிவு வளரும். தேவனைப் புரிந்து வாழ முடியும்.

தேசத்திலே பாவம் பெருகக் காரணம் தேவனைப் பற்றிய அறிவு இல்லை என ஓசியா குறிப்பிடுகிறார். (ஓசி. 4:1) தேவனை அறியும் அறிவை விரும்புகிறேன் என்பது ஓசியா மூலம் ஆண்டவர் அருளிய வாக்கு. (ஓசி. 6:6)

7 ஆம் சங்கீதத்திலே தேவனைப் பற்றி தான் புரிந்து கொண்ட காரியங்களையெல்லாம் தாவீது வரிசைப்படுத்துகிறார்...

நியாயந்தீர்க்கிறவர், (7:6), நியாயம் செய்கிறவர். (7:8), நீதியுள்ளவர். (7:9), இருதயங்களை சோதித்தறிகிறவர். (7:9)

இரட்சிக்கிறவர். (7:10) பாவியின்மேல் சினங்

கொள்ளுகிறவர் (7:11), பட்டயத்தை சுருக்குகிறவர். (7:12)

இப்படிப்பட்ட தேவனைப் பற்றிய அறிவு தாவீதை தேவனுக்காக வாழ வைத்தது. நாமும் தேவனை அறிந்து புரிந்து வாழ்வோம்!

## 2. தேவ மனிதன் மனிதர்களைப் புரிந்து வாழ வேண்டும்.

***"ஜனக்கூட்டம் உம்மைச் சூழ்ந்து கொள்ளும். அவர்களுக்காகத் திரும்பவும் உன்னதத்திற்கு எழுந்தருளும்".*** (சங். 7:7)

தேவ மனிதர்களையும், பாவ மனிதர்களையும் குறித்து 7ஆம் சங்கீதத்திலே தாவீது தெளிவாகப் பேசுகிறார்.

தேவ மனிதன் . . .

- **தேவனை நம்புகிறான். (7:1)**
- **சமாதானமாயிருக்கிறவனுக்கு தீமை செய்யாதவன். (7:4)**
- **சத்துருவுக்கும் தீமை செய்யாதவன். (7:4)**
- **தேவனை மகிமைப்படுத்துகிறவன். (7:17)**

பாவ மனிதன் . . .

- **சிங்கம் போல சீறுகிறவன். (7:2)**
- **அக்கிரமத்தாலும், பொய்யினாலும் நிறைந்திருக்கிறான். (7:14)**
- நீதிமானுக்கு விரோதமாய் குழி வெட்டுகிறவன். (7:15), பெல்லாங்கு நிறைந்தவன். (7:9)

இவ்விதம் பாவ மனிதர்களையும், தேவ மனிதர்களையும் புரிந்து வாழ்ந்தால்தான் இடறலற்ற தேவமனிதர்களாய் நாம் வாழ முடியும்.

## 3. தேவ மனிதன் விளைவுகளைப் புரிந்து வாழ வேண்டும் :

*"தான் வெட்டின குழியில் தானே விழுந்தான்."* (சங். 7:15)

விளையாட்டு வீரனொருவன் போதை மருந்து உபயோகித்து வெற்றியும் பெற்றான். பரிசும் பெற்றான். ஆனால் அவனுடைய தவறு கண்டு பிடிக்கப்பட்டது. விளைவு பரிசு பறிமுதல் செய்யப்பட்டது; விளையாடத் தடையும் விதிக்கப்பட்டது. அபராதமும் கட்ட வேண்டியிருந்தது. விளைவுகள் தெரியாமல் குறுக்கு வழியை நாடி விட்டேன் என புலம்பினான் அவன்.

ஒவ்வொரு செயலுக்கும் விளைவுகள் உண்டு. அதைப் புரிந்து வாழ்ந்தால் எல்லா செயல்களும் நலமாக அமையும். 7ஆம் சங்கீதத்தில் செயலின் விளைவுகளை தாவீது அழகுற வருணிக்கிறார்.

- **மூர்க்கமான சத்துருக்களுக்கு நியாயத்தீர்ப்புண்டு. (7:6)**
- **துன்மார்க்கனுடைய பொல்லாப்பு ஒழியும். (7:9)**
- **செம்மையான இருதயமுள்ளவர்களை தேவன் இரட்சிப்பார். (7:10)**
- **மனந்திரும்பாதவன் மேல் மரணாயுதம் வரும். (7:12,13)**
- **குழி வெட்டுபவன் தானே அதில் விழுவான். (7:15)**
- **தீவினை செய்பவனுக்கு தீவினை வரும். (7:16)**

இவ்விதம் விளைவுகளைப் புரிந்து வாழ்ந்தால் செயல்கள் செம்மையாக இருக்கும். செயல்கள் செம்மையாக இருந்தால் தேவ நன்மைகள் வாழ்வில் நிறைந்திருக்கும்.

## உங்கள் ஜெபம் வேண்டி...



தேவ கிருபையால் எனது மாணவ பருவத்தில் இரட்சிப்பின் அனுபவம் பெற்றேன். இளம் வயதில் முழு நேர ஊழியத்தில் ஈடுபட்டேன். கடந்த 30 வருடங்களாக ஆண்டவர் இரக்கமாய் திருச்சபைகளிலும், எழுப்புதல் முகாம்களிலும் செய்தி கொடுக்க பயன்படுத்தி வருகிறார். ஆண்டவர் எனக்கு அருளிய செய்திகள் அவருடைய கிருபையினால் 80க்கும் மேற்பட்ட புத்தகங்களாக வெளிவந்துள்ளன.

தொடர்ந்து பல கூட்டங்களில் செய்தி கொடுத்து வரும் எனக்காக ஜெபியுங்கள். ஜெபத்தோடு புத்தகங்களை எழுதவும், அர்ப்பணிப்போடு ஊழியம் செய்யவும் மறவாமல் ஜெபியுங்கள்.

தொடர்பு முகவரி

**Evt. J.J.GURUSINGH,** 129, Mizpah Nivas
Near C.S.I. New Church, Tuckkarammalpuram,
Perumalpuram (P.O), Tirunelveli - 627 007. S.India.
Cell : 94433 73026 Email : jjgurusingh@gmail.com